[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பரிந்துரையை ஏற்று கல்லூரி ஆசிரியர்கள், தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள், இன்னும் பல்வேறு ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யு. ஜி. சி. சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாக வழங்குவதற்கான நடவடிக்கை என்ன ? ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். இதற்கான நடவடிக்கை என்ன என்பதையும், அதோடு கல்லூரி ஆசிரியர்கள் நிர்வாகத்திற்குப் பிடிக்கவில்லை என்றால், உதாரணத்திற்கு குமாரசாமி ராஜா கல்லூரியிலே முதலாண்டு பி.யூ.சி. வகுப்பையே அபாலிஷ் செய்துவிட்டு, வேண்டுமென்றே 26 ஆசிரியர்களை நீக்குவதற்கு இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் இன்றைய தினம் இந்தப் பேரவையில் முழுமையான அறிக்கையைத் தர இருக்கிறேன். அதிலே மேற்கொண்டும் பல விவரங்களைச் சொல்லுகிறேன்.

தாகூர்-பாரதி கலையரங்கம்.

*வினா எண் 185— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் தாகூர்—பாரதி கலையரங்கம் கட்டுவதற்காக மாநில அரசு நிதி உதவியளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (ஆ) ஒரு விவர அறிக்கை* சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையிலிருந்து இரவீந்திரநாத தாகூர் நினைவாக 1961 ஆம் ஆண்டில் இந்தப் பணி அவருடைய பெயரால் துவக்கப்பட்டு பின்னால் சில பல காரணங்களால் கட்டி முடிக்கப்படாமல் பிறகு இரவீந்திரநாத் தாகூர் பெயரோடு மகா கவி பாரதியார்

[*696-697-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1978 செப்டம்பர் 13]

பெயரையும் இணைத்து அந்தக் கலையரங்கைக் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அது தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திடம் ஒப்படைப்பது பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகக் கூறி இருக்கிருர்கள். இந்த அரசு இரவீந்திரநாத் தாகூர், பாரதியார் பெயர்களோடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரையும் இணைத்து நினைவு அரங்கம் என்ற பெயரில் உருவாக்கி விரைவில் முடிக்க செயல்முறைகளை வகுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை அரசின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : இரவீந்தரநாத் தாகூர்-பாரதியார் பெயரில் கலை அரங்கு கட்டுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதே போல் மறைந்த தொழிலாளர் தலைவர் ஜீவானந்தம், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆகியவர்களின் பெயரிலும் மக்கள் தொகை நிறைந்த சென்னை நகரில் ஆங்காங்கு கலை அரங்குகள் உருவாக்க தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

துலையானூர் பஞ்சாயத்து

*வினு எண் 186—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம் துலையானூர் ஊராட்சியை, தலையானூர், மலைக்குடிபட்டி என்று இரண்டு ஊராட்சியாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினுவிற்கு இடமில்லை.

திரு. நா. சுந்தரராஜ் : அந்தக் குறிப்பிட்ட ஊராட்சி மன்றம் தன்னுடைய தீர்மானத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி அவர் மூலம் அரசுக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது. மக்கள் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று விரும்புகிருர்கள். அரசு இதுபற்றி இனியாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?